# 7 திருமுறைகள், திவ்வியபிரபந்தம், தோத்திரப்பாடல்கள்

## (அ) திருமுறைகளின் வைப்புமுறை

**திரு** என்பது அழகு, தெய்வீகம், மேன்மை, மங்கலம், செல்வம் எனும் கருத்துக்களைத் தரும். **முறை** என்பது ஒழுங்கு, வரிசை, ஒழுக்கம், உறவு, தரம், நூல் என்னும் பொருள்களை உணர்த்தும் சொல்லாகும். தெய்வீக உணர்வு பெருக; சமய ஒழுக்கத்தைப் பேணும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட நூல்களின் தொகுதி திருமுறை எனலாம். சைவ அடியார்களால் பாடப்பட்ட பாடல்களின் ஒழுங்கமைவான வைப்பு முறையே இதுவாகும். இது பன்னிரெண்டாக வகுக்கப்பட்டுள்ளது.

### திருமுறைத் தொகுப்பு

திருநாரையூரிலுள்ள பொல்லாப்பிள்ளையார் கோயிலில் அர்ச்சகர் ஒருவர் பூசை செய்து வந்தார். அவருக்கு நம்பி என்றொரு மகன் இருந்தார். நம்பி, ஒரு முறை தந்தையாருக்காகப் பிள்ளையாருக்குப் பூசை செய்யச் சென்றார். சிறுவனான நம்பி பூசை முடிவில் நைவேத்தியத் திருவமுதைப் பிள்ளையார் உண்ணாமையால், தமது பூசைக் கடமையில் ஏதோ பிழை நேர்ந்து விட்டதாக எண்ணினார். நம்பி மனம் வருந்தி கல்லோடு தமது தலையை முட்டி மோதி, தம்மைத் தாமே வருத்த முனைந்தார். அப்போது விநாயகர், நம்பி படைத்த அமுதை உண்டு அவருக்கு அருள் பாலித்தார். அந்த நிகழ்வின் பின் **நம்பியாண்டார் நம்பி** என்னும் சிறப்புப் பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது.

நம்பியின் புகழ், சிறப்பு என்பன சோழநாட்டில் பரவியது. அதனை அறிந்த இராஜராஜசோழ மன்னன் அவரின் உதவியைப் பெற்று, தில்லையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த தேவார ஏடுகளை ஒழுங்குபடுத்தித் தொகுக்க விரும்பினான். அதன்படி நம்பியார் தில்லைக்குச் சென்ற போது, தில்லைவாழ் அந்தணர்கள் ஏட்டுச் சுவடிகளை அவருக்குக் கொடுக்க மறுத்தனர். பின்னர், தேவாரம் பாடிய மூவரின் திருவுருவங்களைப் பவனியாகக் கொண்டு, ஆலயத்தை வலம்வந்தபோது அந்தணர்கள் மனம் மாறி, ஏட்டுச் சுவடிகளை நம்பியிடம் கொடுத்தனர். அந்த ஏட்டுச் சுவடிகளில் பலவற்றைக் கறையான் அரித்திருந்ததைக் கண்ட நம்பி மனம் வருந்தினார். அப்போது, "இக்காலத்துக்கு அவசியம் அற்றவையே அழிந்தன" என ஆறுதலளிக்கும் வகையில் ஓர் அசரீரி வாக்கு ஒலித்தது. அதனால், செயலூக்கம் அடைந்த நம்பி கிடைத்த ஏடுகளை இராஜராஜ சோழ மன்னனின் வேண்டுதலுக்கு இணங்க, திருமுறைகளாகத் தொகுத்தார்

### பன்னிரு திருமுறைகளும் அவற்றின் ஆசிரியர்களும்

| திருமுறை | அருளிய நூல் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1 - 3 ஆந் திருமுறை | தேவாரம் | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் |
| 4 - 6 ஆந் திருமுறை | தேவாரம் | திருநாவுக்கரசு நாயனார் |
| 7 ஆந் திருமுறை | தேவாரம் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 8 ஆந் திருமுறை | திருவாசகம்<br>திருக்கோவையார் | மாணிக்கவாசக சுவாமிகள் |
| 9 ஆந் திருமுறை | திருவிசைப்பா<br><br>திருப்பல்லாண்டு | திருமாளிகைத்தேவர், சேந்தனார், கண்டராதித்தர், கருவூர்த்தேவர், சேதிராயர், புருடோத்த நம்பி, திருவாலி அமுதனார், வேணாட்டடிகள், பூத்துருத்தி நம்பிகாடநம்பி.<br>சேந்தனார் |
| 10 ஆந் திருமுறை | திருமந்திரம் | திருமூலர் |
| 11 ஆந் திருமுறை | பன்னிருவர் பாடிய பிரபந்தங்கள் | மதுரை சோமசுந்தரப் பெருமான், காரைக்காலம்மையார் நக்கீரர், பட்டினத்தடிகள், நம்பியாண்டார்நம்பி, ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாயனார், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள் |
| 12 ஆந் திருமுறை | பெரியபுராணம் | சேக்கிழார் |



இலவச விநியோகத்திற்காக